Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 202

வெள்ளிக்கிழமை 16 ஜுன் 2023

ஆனி 01 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054



# போதையை விற்ற போராளிகளிடம் பணம் வாங்கினாராம் டக்ளஸ்

## நேற்று அவரே ஒப்புக்கொண்டார்

யாழ்ப்பாணம், ஜுன் 16

போராட்ட இயக்கத்தினர் போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். நான் அதை நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். அவ்வாறு போதைப் பொருள் வியாபாரம் செய்தவர்களிடம் நான் பணம் வாங்கியிருக்கின்றேன் - இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். »11

## ஊடகங்களை ஒடுக்கேன்!

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 16
ஆசியாவில், எந்தவொரு நாட்டிலும் இடம்பெறாதவாறு குற்றவியல் அவதூறு »11

## 14 வயதான 2 சிறுமிகள் காதலர்களால் வன்புணர்வு

யாழ்ப்பாணம், ஜுன் 16
யாழ். மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் 14 வயது பாடசாலை மாணவிகள் அவர்களது 17 வயது காதலர்களால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மாணவிகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காதலர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். »12

காரைநகர் - ஊர்காவற்றுறை

## தனியாரை வைத்து கடற்போக்குவரத்து!

யாழ்ப்பாணம், ஜுன் 16
காரைநகர், ஊர்காவற்றுறை இடையே, தனியார் படகுகளைக் கொண்டு கடற்போக்கு »11

## புலமைப்பரிசில் ஒக்ரோபர் 15இல்

கொழும்பு, ஜுன் 16
2023ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி நடத்துவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. »11

## 10 வயதுச் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு!

### 30 வயதான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 16
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 10 வயதுச் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் 30 வயது குடும்பத்தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். »12

## நயினாதீவு திருவிழாவுக்கு 40 படகுகளுக்கு அனுமதி

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 16
நயினாதீவு நாகபூஷணி அம்மன் பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாக »11

மருதங்கேணி விவகாரம்;

## முன்னணியின் மூவர் பொலிஸாரால் கைது

### விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் மறுப்பு

கிளிநொச்சி, ஜுன் 16
யாழ்ப்பாணம், மருதங்கேணிப் பகுதியில் பொலிஸாருக்கும் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு »11



## சஜித் தலைமையில் பரந்துபட்ட கூட்டணி

கொழும்பு, ஜுன் 16
எதிர்க்கட்சிகளின் பரந்துபட்ட அரசியல் கூட்டணி சஜித் பிரேமதாஸ தலைமையில் விரைவில் மலரவுள்ளது என்று எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளி »11

போதையைக் கட்டுப்படுத்த

## வடக்கில் வேண்டும் புனர்வாழ்வு மையம்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு; ஜனாதிபதியுடன் திங்கள் பேச்சு

யாழ்ப்பாணம், ஜுன் 16
வடக்கில் போதைப்பொருள் புனர்வாழ்வு மையம் இல்லை. புனர்வாழ்வுக்காக இங்குள்ளவர்கள் தென்னிலங்கைக்கு அனுப்பப்படுவதால் மொழிப்பிரச்சினையை எதிர் »11

## ஆட்சியைத் தக்கவைக்க முழுமையான ஒத்துழைப்பு

### ஜனாதிபதியிடம் பெரமுன உறுதி

கொழும்பு, ஜுன் 16
ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் அதனை முறையாக நிர்வகிப்பதற்கும் தேவையான அனைத்து விதமான ஒத்துழைப்புகளும் நாடாளுமன்றத்துக்குள்ளும் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளின் எண்ணிக்கை சிறைகளில் திடீர் உயர்வு

## கோபா குழுவில் தகவல்



கொழும்பு, ஜூன் 16

**நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது என அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழுவில் தெரியவந்துள்ளது.**

சிறைச்சாலைத் திணைக்களத்தின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையில் கோபா குழு அண்மையில் கூடியபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் 26 ஆயிரத்து 791 கைதிகள் உள்ளனரென நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா கோபா குழுவில் தெரிவித்தார்.

கைதிகளின் எண்ணிக்கை 259 வீதத்தால் அதிகரித்துள்ளது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கூறினார். சில சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 300 முதல் 400 வீதம் வரை அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

சிறைகளிலுள்ள கைதிகளில் 17ஆயிரத்து 502 பேர் விளக்கமறியலிலுள்ள கைதிகள். அவர்களில் 10ஆயிரத்து 470 பேர் போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகள் என்பதும் தெரியவந்தது.

அதேவேளை, சிறைச்சாலைகள் திணைக்களத்தை சர்வதேச தரத்துக்கு அமைவாக உருவாக்குவதற்கு புதிய சட்டவரைவைத் தயாரிக்குமாறு கோபா குழு பரிந்துரைத்துள்ளது. (ச-இ)



# நாமல் குழு விலகினாலும் நாடாளுமன்று கலையாது!

## நிமல் லான்சா நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 16

அமைச்சுப் பதவிக்காக அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்ச விசுவாசிகள் அரசில் இருந்து வெளியேறினாலும் இந்த ஆட்சி கவிழாது. அதனால் நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைக்க வேண்டிய தேவை எழாது - இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான நிமல் லான்சா தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட நிமல் லான்சா, தற்போது நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுகின்றார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவை வழங்கிவருகின்றார். அவர் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது,

'அமைச்சுப் பதவி என்ற பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய தேவை இல்லை. நாமல் ராஜபக்ச குழுவுக்கு மொட்டுக் கட்சியில் தற்போது 25 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுகூட இல்லை. ராஜபக்ச விசுவாசிகள் அரசில் இருந்து வெளியேறினால் பிரச்சினை இல்லை. அவர்கள் வெளியேறினால் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவார்கள்' - என்றார். (எ-44)



# முன்னாள் எம்.பி. கைது

பொதுமக்களை அச்சுறுத்தும் விதத்தில் செயற்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ஹெரணை அமைப்பாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பி.டி. அபேரத்ன கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தனது கைத்துப்பாக்கியால் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-இ)

# மனோவை வியக்க வைத்த முல்லைத்தீவுப் பாடசாலை



முல்லைத்தீவு, ஜூன் 16

புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையின் முன்மாதிரியான செயற்பாடுகள் தொடர்பில் பெருமிதமடைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பயணம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், புதுக்குடியிருப்பிலுள்ள சிறிசுப்பிரமணிய வித்தியாசாலைக்குச் சென்றிருந்தார். அங்கு பாடசாலை அதிபருடன் கலந்துரையாடி பாடசாலையின் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

பாடசாலை அதிபர் அலுவலகம் இயற்கைமுறையில் மரவேலைப்பாடுகள் மூலம் அமையப்பெற்றமையைப் பார்த்து வியப்புற்றார். மாணவர்களுக்கான கற்றல் வகுப்பறைகள் அனைத்தும் பாடசாலை அதிபரின் முயற்சியால் 'ஸ்மார்ட்' வகுப்பறைகளாக்கப்பட்டுள்ளன.

பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்து முன்மாதிரியான பாடசாலையாக விளங்குகின்றமைக்கு தனது பாராட்டுக்களையும் மனோ கணேசன் தெரிவித்தார். (ச-19)

# இனஅழிப்புக்கு நீதி கோரி பிரித்தானியாவில் மாநாடு

லண்டன், ஜூன் 16

இலங்கையில்- தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட வகையில், கட்டமைக்கப்பட்டு நடத்தப்பட்ட- நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இனவழிப்புக்கு நீதி கோரியும் அதனைத் தடுத்து நிறுத்தக் கோரியும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழர் தரப்பினர் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த மாநாடு பிரிட்டன் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

தாயகத்திலிருந்து சென்றிருந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய வி.எஸ்.எஸ். தனஞ்சயன் ஆகியோர் இதில் பங்கேற்றனர். (ச-இ)

# கடவுச்சீட்டுப் பெறுவதில் மோசடி; வவுனியாவில் 5 பேர் கைது!

வவுனியா, ஜூன் 16

குடிவரவு - குடியகல்வு பிராந்தியக் காரியாலயம் முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை 5 பேர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குடிவரவு மற்றும் குடியகல்வு பிராந்தியக் காரியாலயம் முன்பாக வரிசையில் பணிக்கு ஊழியர்களை அமர்த்தி வரிசையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுக்கவும் இடைத்தரகர்களால் பெருந்தொகை பணம் பெறப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதற்கமைய நேற்றுமுன்தினம் காலை பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-ரி-18)

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 16

மல்லாகம் சந்தியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிர்கொல்லி ஹெரோய்னுடன் ஏழாலையைச் சேர்ந்த 29வயதுடைய ஆணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர், ஒரு கிராம் 380 மில்லிகிராம் ஹெரோயினை எடுத்துச்சென்ற வேளை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-ரி2-27)

# தென்னைகளில் வெள்ளை ஈ பாதிப்பைக் கண்டறிய களஆய்வு



கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி, தருமபுரத்தில் தெங்குச் செய்கையில் ஒருவகையான நோய்த்தாக்கம் ஏற்பட்டு வரும் நிலையில், தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் தலைமையிலான குழு நேற்று வியாழக்கிழமை அங்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான தென்னைகளை பார்வையிட்ட பின்னர், தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

தென்னம்பிள்ளைகளின் பச்சையங்களை வெள்ளை ஈக்கள் உறுஞ்சுவதால் இவ்வாறான தாக்கம் ஏற்படுகிறது. முறையாக பசளையிட்டு நீர் பாய்ச்சுதல் அவசியமானது. உரிய முறையில் தென்னைகளை பேணிப் பாதுகாப்பதன் மூலம் இந்த நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தமுடியும் - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவதில் தடங்கல்




யாழ்ப்பாணம், ஜூன் 16

**யாழ். மாவட்டத்தில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மீற்றர் பொருத்துவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.**

யாழ். மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண மீற்றர் பொருத்தப்பட்டது. கட்டண மீற்றருக்கான பணம் தவணை முறையில் செலுத்தும் ஏற்பாடு செய்யப்பட்டது. கொரோனா, பொர்ருளாதார நெருக்கடி என்பன காரணமாக கட்டண மீற்றர் பொருத்திய பல முச்சக்கரவண்டிச் சாரதிகள் தவணைப் பணத்தைச் செலுத்தவில்லை. இதனால் அவர்கள் பொருத்திய கட்டண மீற்றர் கருவி தானியங்கியாக செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. பணத்தைச் செலுத்தி முடித்தாலே அவை மீள இயங்கும். தவணைக் கட்டணம் செலுத்தாத நிலையில் அதற்குரிய வட்டியும் அதிகரித்துள்ளது. வட்டியை முழுமையாக நீக்கினால் தவணைப் பணத்தைச் செலுத்த முடியும் என்றும் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்து தருமாறும் யாழ். மாவட்ட முச்சக்சர வண்டி உரிமையாளர் சங்கத்தால் யாழ். மாவட்டச் செயலருக்கு மனு கொடுக்கப்பட்டுள்ளது.

'வட்டியை விலக்களித்து தருமாறு முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கையை பரிந்துரைத்து கட்டண மீற்றர் பொருத்திய நிறுவனத்துக்கு அனுப்பவுள்ளோம்' என்று யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தவணைக்குரிய வட்டிப் பணத்தை 3 தவணைகளில் செலுத்தி முடித்தால் 25 சதவீத கழிவையும், ஒரே தடவையில் செலுத்தினால் 50 சதவீதக் கழிவையும் வழங்கத் தயாராகவுள்ளதாக மேற்படி நிறுவனப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கட்டண மீற்றர் பொருத்தாத பல முச்சக்கர வண்டிகள் யாழ். மாவட்டத்தில் உள்ளன. அவற்றுக்கும் எதிர் காலத்தில் கட்டண மீற்றர் பொருத்தவுள்ளமையைக் குறிப்பிட்டு வட்டியை முழுமையாக விலக்களிக்க கோருவதற்கு யாழ். மாவட்டச் செயலகம் தீர்மானித்துள்ளது. (ஒ-5,125)

## மின்மாற்றியில் தீ!

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் வடமராட்சி மந்திகைப் பகுதியில் உள்ள மின்மாற்றி அலகுப் பெட்டியில் நேற்றுக் காலை ஏற்பட்ட திடீர் தீயினால் குறித்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தீப்பற்றியதை அவதானித்த அருகிலிருந்தவர்கள் இலங்கை மின்சாரசபை அலுவலகத்துக்கு அறிவித்ததையடுத்து அங்கு விரைந்த மின்சாரசபையினர் மின்சாரத்தைத் துண்டித்து தீயை அணைத்தனர். அத்துடன் மின்மானி அலகுப்பெட்டியைச் சீர்செய்தனர். (ச-27)



## யாழ்ப்பாணம் வந்தார் சுவிஸ் பாதுகாப்பு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 16

சுவிஸ் தூதரகத்தைச் சேர்ந்த பாதுகாப்பு விவகாரங்களுக்கான அதிகாரி பிரான்கொயிஸ் பிலிப் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அவரை யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி ஹெட்டியாராய்ச்சி வரவேற்றார். இருதரப்பு சிவில் இராணுவ ஒத்துழைப்பு, சமூக நலத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்த பயணத்தின்போது கலந்துரையாடப்பட்டதுடன் பரிசுப்பொருள்களும் பரிமாறப்பட்டன. (ச-6)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ரி-66)

## இணைத்தலைவராக ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 16



வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வடக்கின் 5 மாவட்டங்களினதும் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் செயலரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநராக கடந்த மாதம் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமைப் பதவி வழங்கப்படவில்லை. இதனால் வடக்கின் 5 மாவட்டங்களிலும் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் அவர் பங்கேற்கவில்லை.


இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கின் 5 மாவட்டங்களினதும் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவராக அவரை ஜனாதிபதியின் செயலர் நியமித்து மாவட்டச் செயலகங்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணக் கச்சேரிப் பக்கமா பட்சி பறந்து கனநாளாப் போச்சுது. அதால ஒருக்கா அங்காலிப்பக்கம் நிலைமையள் என்ன மாதிரி இருக்கெண்டு 'விசிட்' ஒண்டு அடிச்சம். ஒருவருசத்துக்கு முதல் அங்க இருந்த நிலைமையெல்லாம் இப்ப தலைகீழாகிட்டுது. ஆரெல்லாம் முந்தி 'அமுல்பேபியின்ர' பக்கம் நிண்டு ஆட்டம் போட்டிச்சினமோ, அவ்வளவு பேரும் இப்ப அமைச்சரின்ர தாளத்துக்கு வாலாட்டத் தொடங்கிட்டினம். அதில முக்கியமானவர் 'குமாரரான அதிகாரி'. எதையும் பிளான் பண்ணிச் செய்யிற அவர், இப்ப அமைச்சருக்கு பிளான் 'போட்டுக்குடுக்கிறதில' தீயா இறங்கியிருக்கிறாராம். அமைச்சரின்ர சப்போர்ட் இருக்கிற தைரியத்தில , தன்ர தூசண அம்புகளை சரமாரியா விடத் தொடங்கியிருக்கிறார். எவ்வளவு நாளைக்குத்தான் இவரின்ர இந்தத் தூசண அர்ச்சனையை அவருக்குக் கீழ வேலை செய்யிறவை தாங்கிக் கொண்டிருக்க ஏலும்? இந்தத் திங்கட்கிழமை, 'குமாரரான அதிகாரி' குடுத்த வேலை ஒண்டைச் செய்ய ஒராள் மறந்திட்டார். உடனேயே வாய்க்கு வந்தபடி, தன்ர தூசணக் குடோனை இந்த அதிகாரி திறந்துவிட, பதிலுக்கு அந்த உத்தியோகத்தரும் கொஞ்சம் காரமாக் கதைச்சிருக்கிறார். 'குமாரரான அதிகாரிக்கு' வந்திச்சே கோபம். ஆளை அடிக்கிறதுக்கு கையை ஓங்கிட்டார். பிறகு அடிச்சால் சிக்கல் எண்டு நினைச்சிட்டு ' உன்னையெல்லாம் அமைச்சரிட்ட சொல்லி தண்ணியில்லாக் காட்டுக்கு அனுப்பிறனோ இல்லையோ எண்டு பார்' எண்டு சபதம் போட்டுட்டு போயிருக்கிறாராம் . அதுக்குப் பிறகு அவரை எல்லாரும் 'சபதக்குமார்' எண்டுதான் தங்களுக்குள்ள சங்கேதப்பாஷையில கதைக்கினமாம்.

'சபதக்குமார்' தான் இப்பிடியெண்டால், எங்கட கச்சேரிச் சொர்ணாக்கா தனி ஆவர்த்தனம். ஏற்கனவே சொர்ணாக்கா, ஓசி எண்டால்பாசியைக் கூட பதுக்கிற ஆள். இப்ப அவாக்கு இன்னொரு லக் அடிச்சிருக்கு. அமைச்சரின்ர இணைப்பாளரா ஒரு பொம்பிளையை கச்சேரியில போட்டு, அவாக்கு தனிவாகனமும் குடுபட்டிருக்கு. 'அமுல்பேபி' பக்கமிருந்து அமைச்சர் பக்கம் குத்துக்கரணம் அடிச்சதில சொர்ணாக்காவும் முக்கியமான ஆள். அமைச்சரின்ர இணைப்பாளரும், சொர்ணாக்காவும் ஒரே ஏரியாக்காரராம். அதால இணைப்பாளர் வரேக்க அவாவின்ர வாகனத்திலதான் சொர்ணாக்காவும் ஏறிவாறவாவாம். இத்தனைக்கும் சொர்ணாக்காவுக்கும் தனி வாகனம் குடுபட்டிருக்கு. பெற்றோல் அலவன்ஸும் இருக்கு. ஆனால் இதில ஏறியந்தால் அந்தக் காசை அப்பிடியே சுருட்டி , தன்ர 'ஹாண்ட் பாக்குள்ள'போடலாமெல்லோ. சும்மாவே மீற்றிங் பலகாரங்களையே ஹாண்ட்பாக்குக்குள்ள போட்டுப் பழகினவாக்கு, இப்பிடி மிச்சம் பிடிச்ச காசைப் போட கசக்குமா என்ன? அதால இப்ப 'ஏரியா ஏறியா' எண்ட திட்டத்தைத்தான் சொர்ணாக்கா கடைப்பிடிக்கிறாவாம். இனி அடிக்கடி பட்சி கச்சேரிப்பக்கம் பறக்கத்தான் வேணும் போல.



- பட்சி

# குருந்தூர்மலையைப் பற்றி பணிப்பாளருக்கு தெரியாதாம்

## தலைமைத்தேரர் கொதிப்பு



**கொழும்பு, ஜூன் 16**
**தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நாயகம் குருந்தூர் விகாரை தொடர்பான எந்த அறிவும் இல்லாமலேயே ஜனாதிபதியுடன் கலந்துரையாடலுக்குச் சென்றிருக்கிறார் என்று குருந்தூரில் புதிதாக அமைக்கப்பட்டுள் விகாரையின் தலைமைத்தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மகாவிகாரையை விட குருந்தூர் விகாரை விசாலமானதா என ஜனாதிபதியின் கேள்விக்கு ஆணையாளருக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவர் குருந்தூர் விகாரைப் பிரச்சினை ஏற்பட்ட காலத்தில் இருந்து இந்த விகாரையின் பரப்பளவு தொடர்பாகவோ இங்குள்ள பிரச்சினை தொடர்பாகவோ சரியாக ஆராய்ந்து பார்க்கவில்லை. குருந்தூர் விகாரைக்கு அவர் வரும்போது தமிழ் மக்கள் பிரச்சினையை ஏற்படுத்துவார்களா என்ற அச்சத்துடனே இங்கு வந்து அவசரமாகச் சென்று விடுவார். அதனால் இந்த விகாரையின் காணி தொடர்பில் அவர் எந்தத் தயார் நிலையும் இல்லாமலேயே ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்குச் சென்றிருக்கிறார்.
குருந்தூர் விகாரையின் காணி தொடர்பில் தெரிவிப்பதாக இருந்தால், 1933 ஆம் ஆண்டு வெள்ளையர் காலத்தில் குருந்தூர் விகாரை தொல்பொருள் பாதுகாப்புப் பிரதேசமாக 78 ஏக்கர் நிலப்பரப்பாக அளவிடப்பட்டிருந்தது.
பின்னர் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின் பின்னர் இன்னும் பல தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பிரகாரம் மொத்தமாக தற்போது சுமார் 310 ஏக்கர் காணிப்பரப்பு குருந்தூர் விகாரைக்கு இருக்கிறது. போருக்குப் பின்னர் குருந்தூர் விகாரையைச் சுற்றியுள்ள 50 ஏக்கருக்கும் அதிக காணியில் காடு அழிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு விவசாயம் செய்ய அந்தப் பிரதேசத்தில் காணி வழங்கவேண்டும் என்றிருந்தால், தொல்பொருள் இல்லாத இன்னும் 6 ஆயிரம் ஏக்கர் காணி அந்த இடத்தில் இருக்கிறது. அதில் இருந்து வழங்க முடியும். அதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் தொல்பொருள் இருக்கும் இடங்களை வழங்க அனுமதிக்க முடியாது. - என்றார். (எ-இ)

# வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 16
வீட்டுத்தோட்டச் செய்கையின் ஊடாக ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெறும் நோக்கில் வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிப்பதற்கான பயிற்சிப்பட்டறை கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தால் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நடத்தப்படவுள்ளது.
இந்தப் பயிற்சிநெறியில் ' வீட்டுத்தோட்டச் செய்கைக்கான பயிர்த்தெரிவு, அவற்றின் பராமரிப்பு முறைகள், இயற்கைப்பசளை உற்பத்தி மற்றும் இயற்கையான பீடைக்கட்டுப்பாடு முறைகள் உள்ளிட்ட விடயங்களில் அறிவூட்டல் செயன்முறை இடம்பெறும்.
பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் **021 226 4958** எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பதிவுகளைச் செய்யலாம் என வடமராட்சி தெற்கு பிரதேச செயலளர் தெரிவித்துள்ளார். (ச-ரி2)

# அதிபர்கள் பிரச்சினை ஆராய்வதற்கு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
தரம் பெற்ற அதிபர் சங்கத்தின் வடக்கு மாகாண சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வடக்கு மாகாண அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதுடன் நிர்வாகக் கட்டமைப்பும் உருவாக்கப்படவுள்ளது. ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். அனைத்து தரம்பெற்ற அதிபர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு தரம்பெற்ற அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ச-ரி)



# இந்து மாமன்றத்தின் வன்னி அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
ஏ-9 பிரதான வீதியில் திருமுறிகண்டி பிள்ளையார் கோயிலுக்கு அண்மித்ததாக அமைக்கப்பட்ட அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வன்னி அலுவலக வளாகம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
இந்த வளாகத்தில் 'சரவணப் பொய்கை' தடாகத்தின் மேலமைக்கப்பட்டுள்ள அறுகோண மண்டபத்தில் அறுபடை வீடுகளிலும் அருள்புரிகின்ற முருகப்பெருமான் விக்கிரகங்களும் நடுநாயகமாக வள்ளி - தெய்வானை சமேதராக ஷண்முகப்பெருமான் விக்கிரகமும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் பங்கேற்று வளாகத்தை திறந்துவைத்தார். (ச-17)

# 'நம் தாயகம்' உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் திறப்பு

முல்லைத்தீவு, ஜூன் 16
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெண்கள் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நம் தாயகம் உற்பத்தி நிலையம் கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.
உள்ளூர் உற்பத்திப் பொருள்களை முடிவுப் பொருள்களாக்கி உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சந்தைவாய்ப்பை ஏற்படுத்துவதாகவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகவும் இந்த உற்பத்தி நிலையம் விளங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-ரி-19)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியாகி முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். வீண்செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைச் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். லாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண்மனஸ்தாபம் ஏற்படும். செலவுகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எதிர்காலம் சுடுகாடா?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கோரமுகம் தொடர்பில் அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்தே சொல்லப்பட்டு வருகின்றது. பயங்கரவாதத்தை ஒடுக்குவதை நோக்கமாகக்கொண்டு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் நடைமுறையில் அதன் பிரயோகம் அப்படியிருக்கவில்லை. ஆட்சியாளர்களுக்கு விரும்பாத தரப்புகள் எல்லோரையும் ஒடுக்கும் அரசியல் ஆயுதமாகவே அந்தச் சட்டம் இற்றைவரையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காலாதிகாலமாக அந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று வெளிநாட்டுத் தரப்புகள் வலியுறுத்தினாலும், மாறிமாறி ஆட்சிக்கு வரும் எந்தவொரு தரப்பும் அதனை நீக்குவதற்கு முழுமனதுடன் இணங்குவதில்லை. எப்படி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என்று கூறி ஆட்சிக்கு வந்து அதனைப் பலப்படுத்தி தொடர ஒவ்வொரு ஜனாதிபதியும் நினைக்கிறார்களோ, அதனைப் போன்றே பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தங்களது அரசியல் எதிரிகளை ஒடுக்கும் அஸ்திரமாகவே பயன்படுத்தியிருக்கின்றார்கள். இதில் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழ் மக்கள்.

தமிழர்கள் தங்கள் உரிமையை மீட்க ஆரம்பித்த போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரித்து தமிழ் மக்களை கூண்டோடு ஒழிக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பேரினவாத அரசாங்கம் பயன்படுத்தியது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல ஆயிரம் அப்பாவி இளைஞர்கள் குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாமல் சிறைக்கம்பிகளின் பின்னே தங்கள் வாழ்வை முடித்துக்கொண்ட அவலங்களும் அரங்கேறியிருந்தன. இவை எல்லாமும் சொல்லப்பட்ட கதைகளானாலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கோரமுகத்தை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் கொழும்பைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் ஒருவர்.

'2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் 2 ஆயிரத்து 793 பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 474 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கைதானவர்களில் 184 பேர் சந்தேகநபர்களாக அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 44 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 31 பேர் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டுள்ளனர். 10 வழக்குகள் மீளப் பெறப்பட்டுள்ளன' என்ற தகவல் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் எஸ்.எஸ்.பி. பிரசன்ன டி அல்விஸால் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 6 சதவீதத்தினருக்கு எதிராகவே வழக்குத் தாக்கலைச் செய்திருக்கின்றார்கள். அதிலும் 31 பேர் குற்றமற்றவர்கள் என்று 10 வழக்குகள் மீளப் பெறப்பட்டிருக்கின்றன. 2 ஆயிரத்து 290 பேர் மீது வழக்கே தொடுக்காமல் ஆண்டுக்கணக்காக தடுத்து வைத்திருக்கின்றார்கள். மிகப் பெரியதொரு மனித உரிமை மீறலை சர்வசாதாரணமாக பேரினவாத அரசு செய்துகொண்டிருக்கின்றது. மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அரசு, தனது அரசியல் பழிவாங்கலுக்காக 2 ஆயிரத்து 290 பேரை சிறையில் தடுத்து வைத்திருக்கின்றது. 2 ஆயிரத்து 290 பேர் என்ற எண்ணிக்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மாத்திரம்தான். இவர்களை நம்பி வாழும் குடும்பங்களின் நிலைமைகள் என்ன? பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கோரமுகம் தொடர்பில் பலரும் பலமுறை பேசியிருந்தாலும் முதல் தடவையாக தரவுகளுடன் அம்பலப்பட்டிருக்கின்றது அரசாங்கம். அந்தச் சட்டம் முழுமையாக மனித உரிமைக்குப் புறம்பானது என்பதை தோலுரித்திருக்கின்றன தகவலறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள்.

இந்தச் சட்டமே இவ்வளவு மோசமானதாக இருக்க இதைவிட படுமோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை நிறைவேற்றவே ரணில்– ராஜபக்ச அரசாங்கம் துடியாய்த் துடித்தது. தற்போது அது ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சட்டவரைவு மீண்டும் தூசி தட்டப்பட்டு நாடாளுமன்றம் வரும்போது மக்கள் அமைதியாக இருந்தால், எதிர்காலம் சுடுகாடுதான்.

## நாளொரு நல்வார்த்தை

"சிரிப்பு என்பதே மனிதரோடு மனிதரை இழுத்துச் சேர்க்கும் ஒரு காந்தக் கல்!"

– சேப்டஸ்பரி



# தொல்பொருள் மரபுரிமை; மொட்டின் நிலை என்ன?



கொழும்பு, ஜூன் 16

**"சிங்கள பௌத்த தனித்துவத்தை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவினர் மரபுரிமைகளுக்கு எதிராக ரணில் எடுக்கும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வார்களா?"**

- என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'குருந்தூர் மலைக்கு 275 ஏக்கர் நிலப்பரப்பு காணி அவசியமற்றது. நிலப்பரப்பை குறைக்கவேண்டும்' என்று ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மறுத்துள்ளார்.

வடக்கில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் குருந்தூர் விகாரை கி.மு. 110 - 103 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள அரசனால் நிர்மாணிக்கப்பட்டது என தொல்பொருள் சான்றாதாரங்கள் குறிப்பிடுகின்றன. நாட்டப்பட்ட நில அளவைத் தூண்களை அகற்றுமாறு ஜனாதிபதி கட்டளை பிறப்பித்துள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகளின் கட்டளைக்கு அமைய ஜனாதிபதி செயற்படுகிறார். அரசியல்வாதிகளின் ஆலோசனைக்கு அமைய தொல்பொருள் மரபுரிமைகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தால் 1979 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட கிரிவெட்டி விகாரைக்கு நேர்ந்த கதியே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளுக்கு நேரிடும். பௌத்த - சிங்கள தனித்துவத்தை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவினர் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வார்களா? - என்றார். (எ-இ)

## டிப்ளோமாதாரிகளுக்கு இன்று நியமனங்கள்!

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட்ட தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 350 டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது என கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ச-ரி)

## முறைகேடெனில் முறையிடலாம்

கொழும்பு, ஜூன் 16

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் புதிய நலன்புரித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், சமுர்த்தி மானியங்களை இழந்த பயனாளிகள் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கலாம் என ஜனாதிபதி செயலணியின் தலைவர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை 17.06.2023 சனிக்கிழமை ஆனி 02

சுபநேரம் : 02.53 - 04.23

ராகுகாலம் : 08.53 - 10.23

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் மீண்டும் மலேரியா!

## மக்களுக்கு எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 16**

**இலங்கையில் மலேரியாவைப் பரப்பும் நுளம்புகள் கண்டறியப்பட்டுள்ளதுடன் மலேரியாக் காய்ச்சல் மீண்டும் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிலுள்ள ஆறு சுகாதார மருத்துவ அதிகாரி பகுதிகளில் இந்த நுளம்புகளின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. அதனால் மலேரியா அச்சுறுத்தல் மீள தலைதூக்க வாய்ப்புள்ளது.

சுகாதார அமைச்சின் தகவல்களின் படி, அம்பாறை மாவட்டத்திலுள்ள, அக்கரைப்பற்று, திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் அட்டாளைச் சேனை போன்ற பகுதிகளில் மலேரியா நுளம்புகளின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம் பருத்தித்துறையிலும் இந்த அச்சுறுத்தல் அதிகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் தமது சுற்றுச்சூழலை நுளம்புகள் பெருகாத வகையில் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகளின் மூலம் மன்னாரில் கண்டறியப்பட்டது.

அதன்பின்னர் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் முதன்முதலில் மலேரியாவைப் பரப்பும் நுளம்புகள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

> "பருத்தித்துறையில் இந்த அச்சுறுத்தல் அதிகம்"




## நாடக ஆளுமை பாலேந்திராவின் நூல் வெளியீடும் அறிமுகமும்!

ஈழத்து நாடகத் துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து இயங்கிவரும் ஆளுமை பாலேந்திராவின் நேர்காணல்கள் தொகுப்பு நூல் வெளியீடும் 'பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்' நூலின் அறிமுகமும் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பா.இரகுவரன், நா.நவராஜ், ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். அத்துடன் கொழும்பு மற்றும் கனடாவில் வெளியிடப்பட்ட 'பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்' நூலின் அறிமுகமும் இடம்பெறவுள்ளது.

பாலேந்திரா மேற்கொண்ட அரங்கப் பயணத்தில் அவர் எதிர்கொண்ட சவால்களையும் சாதனைகளையும் அடக்கிய ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு முக்கியமான - பயன்மிக்க ஆவணத் தொகுப்பாக இந்த நூல் அமைகின்றது. (ச)

## முல்லை விவசாயிகளுக்கு

# மானிய உரவவுச்சர்

முல்லைத்தீவு, ஜூன் 16

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் மானிய உரத்தைப் பெற்றுக்கொள்ள வவுச்சர் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானிய உரத்துக்கான வவுச்சர்கள் கடந்த மே மாத இறுதிக்குள் முன்னெடுக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கான மானிய உரத்துக்கான வவுச்சர், கட்டம் கட்டமாக வழங்கும் நடவடிக்கை கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் உடையார்கட்டு கமநலசேவைத் திணைக்களத்தின் கீழுள்ள 665 விவசாயிகளுக்கு வவுச்சர்கள் வழங்கப்பட்டன. ஒரு ஹெக்ரேயருக்கு 20 ஆயிரம் ரூபா வவுச்சர் மானியமாக வழங்கப்படுகின்றது.

விவசாயிகள் கமநலசேவைத் திணைக்களத்தின் ஊடாகவும் தனியாரிடமும் வவுச்சரைப் பயன்படுத்தி உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-19)

# தீயில் எரிந்த பட்டா

## மன்னாரில் சம்பவம்

மன்னார், ஜூன் 16

மன்னார், முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் பயணித்த வாகனமொன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. தெய்வாதீனமாக அதில் பயணித்தோர் உயிர்தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் மன்னார் மதவாச்சி பிரதான வீதி இசைமாலைத்தாழ்வு பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

வியாபாரப் பொருள்களை ஏற்றி மன்னார் நோக்கிப் பயணித்த சிறிய பட்டா ரக வாகனமே தீப்பற்றி எரிந்துள்ளது. சாரதி மற்றும் உதவியாளர் துரிதகதியில் செயற்பட்டதால் எந்தவிதமான காயங்களும் இன்றி உயிர்தப்பினர். ஆயினும் வாகனம் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-ரி2-56)



## கைது!

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாசிவன் சந்தியில் கசிப்புடன் ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேடகுற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 3 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-ரி- 27)

## மின்சாரம் தாக்கி இருவர் சாவு!

மட்டக்களப்பு அமிர்தகழி பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி இரண்டு தச்சுத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. வீடு ஒன்றின் கூரை திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை மின்சாரம் தாக்கியதில் அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (ச- 22)

## முல்லைத்தீவில் அரசியல் தெளிவூட்டல்

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை, அரசியல் வகிபாகம் மற்றும் அரசியல் தீர்வு ஆகியவை தொடர்பில் தெளிவூட்டும் கலந்துரையாடல் முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா பங்கேற்று கருத்துரைத்தார். (ச-19)

# ஆசிரியர் சேவைக்கு 5, 500 பட்டதாரிகள்!

கொழும்பு, ஜூன் 16

35 வயதுக்கு மேற்படாத 5 ஆயிரத்து 500 பட்டதாரிகள் விரைவில் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார். 'விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், மொழி, புவியியல் மற்றும் வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கு மூன்று மொழிகளில் இருந்தும் ஆசிரிய சேவைக்கு புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அதேவேளை 7ஆயிரத்து 500 கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

சமூகத்தில் உள்ள போதைப்பொருள் போன்ற தவறான நடத்தைகள் மற்றும் தகாத நடத்தைகள் பாடசாலைகளுக்குள் நுழைவதைத் தடுக்க வேண்டும்.


பாடசாலை நிர்வாகத்தில் அதிபருக்கு சுதந்திரம் இருக்கவேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் முறையற்ற தலையீடுகள் பொருத்தமற்றன' எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுப்பாதை திறப்பும் உணவுப்பொதி வழங்கலும்




வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டுக் கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
குறித்த பாதை ஊடாகக் கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிப் பாத யாத்திரை செல்லும் அடியவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 7 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பில் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் குடிதண்ணீர் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டது.
சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் இணைந்து நேரடியாகச் சென்று இந்த உதவிகளை வழங்கி வைத்தார். (ய-66)



இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.
இந்தத் திருவிழாவில் குதிரையாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட பாரம்பரியக் கலைநிகழ்வுகளும், கண்களைக் கவரும் வண்ண வாணவேடிக்கைகளும் இடம்பெற்றன. (ய-66)



மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவர் அருட்பணி நவரட்ணம் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் மாணவர்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்கும் பொருண்மியம் நலிந்த 26 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வும் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. (ய-60)



சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை மற்றும் சங்கரத்தை அம்பாள் அறக்கட்டளை ஆகியன இணைந்து கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியை வழங்கினர்
சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையின் இயக்குநர் ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், குறித்த மாணவி கல்வியைத் தொடர்வதற்கு மாதாந்தம் ஐயாயிரம் ரூபா நிதி உதவியும் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது. (ய-27)

## முன்மாதிரி செயல்




மன்னார் - நானாட்டான் பிரதேச மருத்துவமனையில் நானாட்டான் முச்சக்கர வண்டி சங்க உறுப்பினர்களால் கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டதுடன் சுற்றுமதில்களுக்கு வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டுள்ளது. (ய-213)

## கௌரவிப்பு



உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு தேசிய இரத்த மத்திய நிலையத்தில் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் வட மாகாணத்தில் அதிகபட்சமாக 88 தடவைகள் குருதிக்கொடை வழங்கிச் சாதனை படைத்த யாழ்.நயினாதீவைச் சேர்ந்த துரைமணி ரமணன் தேசிய ரீதியாக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை

## கண்ணலிங்கேஸ்வருக்கு நாளை கொடியேற்றம்

வட்டுக்கோட்டை, ஜூன் 16 வரலாற்று பெருமைமிக்க வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரரின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 21ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு பக்திமுத்தி உற்சவமும், அன்றையதினம் மாலை 7 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சப்பறத் திருவிழாவும், 24ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், எதிர் வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து தேர் உற்சவமும் இடம்பெறவுள்ளது. திங்கட் கிழமை அதிகாலை 4 மணிக்கு நடேசரபிஷேகத்தைத் தொடர்ந்து ஆனி உத்தர தரிசனமும், முற்பகல் 11.30 மணிக்கு ஆலய பித்தர் கேணியில் தீர்த் தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ம)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி அணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சு.தர்சினி அவர்களின் அன்புக் கணவர்

**தம்பாப்பிள்ளை சுதாகரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிச் கூட்டுறவுச் சங்கம்.

தோற்றம் : 02.01.1967
மறைவு : 15.06.2023

## 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 06 . 1949



மறைவு 28 . 06 . 1992

அமரர்

**மாசிலாமணி தேவநேரு**

(கிராம சேவகர்)

தங்களை இழந்த பின்
எம் வாழ்வில்
வரும் ஒவ்வொரு நிமிடமும்
முட் பாதைகளே அப்பா!

செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

மனைவி,
பிள்ளைகள்.

(cs 25248) (2.6)

## வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்.

பதிவு இல - V/271

பணிநிலை வெற்றிடம் - வெளிவாரி விண்ணப்பம் கோரல்

2023.06.16

பின்வரும் விபரப்படியான பதவிக்கு தகுதியான ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. பதவி - விற்பனை உதவியாளர்
சம்பள குறியீட்டு இல - 308/15
வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம் - 17435-145x10-160x10-20485

தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் / எரிபொருள் நிரப்புநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி /க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

02. பதவி - சாரதி
சம்பள குறியீட்டு இல. - 312/15
வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம் - 17435-145x10-160x10-20485

தகைமைகள்

05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் மோட்டார் கார் சாரதி அனுமதி பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை 18-45

**விண்ணப்ப முடிவுத்திகதி 30.06.2023**

சகல விபரங்களை உள்ளடக்கி சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை (சான்றிதழ்களின் பிரதியுடன் ) பின்வரும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச்சங்கம்,
27. பஜார் வீதி, வவுனியா.

(cs 50855) (N-1)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 25 . 08 . 1935



இறப்பு 15 . 06 . 2023

**சுவாம்பிள்ளை அடைக்கலம்**

(இளைப்பாறிய - அதிபர்)

எமது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் செல்வி ஜீன் அடைக்கலம் அவர்களின் அன்புத் தந்தையின் இறப்பில் துயர் பகிர்வதுடன் அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ பாஷையூர் சென் அன்ரனீஸ் றோ.க.ம.வி.

## புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய உற்சவம் தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச சபையினால் வெளியிடப்படும் அறிவித்தல்

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய உற்சவம் எதிர்வரும் **19.06.2023** ஆம் திகதி அன்று இடம்பெறவுள்ளது. குறித்த பொங்கல் விழாவின்போது வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் வருமாறு.

(1) உணவுப்பொருட்களைக் கையாளுகின்ற சகல வர்த்தகநிலையங்களும் பிரதேச சபையினது அனுமதியினைப் பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். இதற்காக அனுமதிகளை ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் தற்காலிக பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

(2) ஆலயத்திற்கு வருகைதருகின்ற அனைத்துப் பக்தர்களுக்குமான வாகனத் தரிப்பிட வசதிகளும் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**குறிப்பு:** தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப்பட்டுள்ள ஆடம்பரப் பொருட்களுக்கு எமது சபையினால் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்பதனை கருத்திற் கொள்ளவும்.


சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.

(N - 1)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 18.05.2023 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் கிருஷ்ணபிள்ளை சிவகுமார்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.06.2023) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

காரை வட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

உ
சிவமயம்

## நயினையில் அம்மனுக்குத் திருவிழா

## அமுதசுரபியில் அன்னதானம்



அருள் நிதிதரவரும் ஆனந்த மலையாக அலைகடல் நடுவே வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் சோபகிருது வருட உயர் திருவிழா எதிர்வரும் 19.06.2023 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை கிராம சாந்தி நடைபெறும். கிராமசாந்தி நாள் தொடக்கம் (18.06.2023) ஸ்ரீநாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபையினர் நயினைக்கு வரும் அனைத்து அடியார்களுக்கும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அன்னதானம் வழங்க சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றனர்.

**குறிப்பு:** அன்னதான பணிக்கு தேவையான பணம், பொருட்கள் ஆகியவற்றை வழங்க விரும்பும் அடியார்கள் யாழ். மார்கட் இல் அமைந்துள்ள சிவகுமார் வெற்றிலைக்கடையில் வழங்கி பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

பிரதான சாலை,
நயினாதீவு - 2

நிர்வாகத்தின் சார்பில்
ம.அம்பிகைபாகன்
செயலாளர்,
ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை.

**T.P.: 021 321 3575, 021 431 2149**

(cs.25219) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளைச் சாவடைந்த இளம் பெண் மரணம்

உடல் சுகவீனம் காரணமாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த ஜெனார்த்தனன் கனிஷ்ரிகா (வயது-25) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி முதல், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்தார். மூளை சாவடைந்தே அவர் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27)

**காணி விற்பனைக்கு**

K.K.S.றோட் மல்லாகம் (J-214) 2 1/4 பரப்பு (பழைய சோடா கொம்பனி ஒழுங்கை அருகில்) விற்பனைக்குண்டு.

T.P.: 077 753 2994

**வேலையாட்கள் தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் **கூல் பார்** ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

T.P.076 699 0898, 075 130 6392

**உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் நித்திய பூசகர் தேவை**

**பிரதம குரு "வேதசிவாகம ஞானபானு" "சாஸ்தா பிரதிஸ்டா கல்ப்ப ஸ்ரேஷ்டர்" பிரம்மஸ்ரீ க.மு. சோமசுந்தரக் குருக்கள்**

மேற்படி எமது ஆலயத்தில் நித்திய பூசைகளை ஆசார சீலத்துடன் நேர்த்தியாக நிறைவேற்றித் தரவல்ல பிராமண நித்திய பூசகர் தேவைப்படுவதனால் தகுதியானவர்கள் 24.06.2023 இற்கு முன்பதாக நேரிலோ அல்லது செயலாளர், உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு:

021 223 1551 / 076 358 3331

பரிபாலன சபையினர்
உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 10 . 1932



மறைவு 14 . 06 . 2023

### இளையதம்பி நல்லையா

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நல்லையா அவர்கள் கடந்த (14.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி இளையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கரத்தினம் அவர்களின் பாசமிகு கணவரும், செல்வரஞ்சினி, சிவகுமாரன், பிரபாகரன், றோசினி, பஞ்சதேவி, சிவபாலன், கருணாகரன், ஞானரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயதெய்வேந்திரன், சத்தியதேவி, ஜெயக்குமாரி, செல்வச்சந்திரன், குகனேஸ்வரன், சாந்தரூபி, கௌரி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபன், வேணுஜா, பிந்துஜா, விபிஷணன், பிரபாணுஜா, மாதுரி, டர்ஷிகா, சுவேதிகா, டீவிகா, திவானுஜா, அபிஷாலினி, டிசாலினி, சரணியா, அகர்ஷணன் ஆகியோரின் அன்புப் பேரனும், அகரவன், ஆருஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25067) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 08 . 1935



இறப்பு 15 . 06 . 2023

### திரு. சுவாம்பிள்ளை அடைக்கலம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

விடத்தல்தீவு, மன்னாரை பிறப்பிடமாகவும் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் திரு.சுவாம்பிள்ளை அடைக்கலம் அவர்கள் நேற்று (15.06.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுவாம்பிள்ளை எலிசம்மா தம்பதியரின் கனிஸ்ட அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி பிளசம் குணமணி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ஜினா பிறிஸ்கா, செல்வி ஜீன் (ஆசிரியர், புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை-பாசையூர், யாழ்ப்பாணம்), திருமதி ஜேன் ஜெசிக்கா (சுற்றாடல் உத்தி யோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், திரு.போல் அருள்நாயகம் (AIA சிரேஸ்ர நிதி ஆலோசகர்), திரு.நிமால் ஜெய்சிகன் (மதுவரி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு.நீக்கிலாப் பிள்ளை (விடத்தல்தீவு), சந்தியாப்பிள்ளை (அதிபர்-விடத்தல்தீவு), தங்கமணி (நாவாந்துறை), செல்லம் (விட்டத்தல்தீவு), மலக்கியாஸ் (அதிபர் -நாவாந்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜோசப் குணநாதன் (மருந்தாளர்), அருட்சகோதரி நீற்றா குணநாயகம் (OMMI,Mannar), திரு.கிருபைநாதன் (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும், ஜறின் யூலியா, ஜெறின் இன்வன்ரா, அன்றியா (மாணவிகள், திருக்குடும்ப கன்னியர் மடம்), எட்றியன், எய்டன் ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.06.2023) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொடர்பு: 077 659 1277
077 360 8642

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 10 . 1954



மறைவு 15 . 06 . 2023

### சுப்பையா தர்மராசா
(களஞ்சிய முகாமையாளர் - அண்ணா தொழிலகம்)

இணுவில் தெற்கு நடுவிளாத்தி ஞானவைரவர் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தர்மராசா நேற்று (15.06.2023) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும், ஆறுமுகம் இராசம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் இரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் கதிரவேலுவின் மைத்துனரும் கஜந்தி (அவுஸ்திரேலியா), பவித்திரா (லண்டன்), ரஜிந்தன், கஜீபன், நித்தியவாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சதீஸ்வரன், சிவதாசன், துயந்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திலீபன், சுகன்யா, துஸ்யந்தன், துஸான், துஸாணி, துர்ஷிகா, சஜீவன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், கர்ணி, கரிஸ், அத்மிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நடுவிளாத்தி ஞானவைரவர் கோவிலடி,
இணுவில் தெற்கு.
077 367 1317, 077 6389 193

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 40139) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசின் வீராப்பு கேலியானது

## சஜித் ஆவேசம்

ஊட்டச்சத்துப் பிரச்சினைகளை வைத்துக்கொண்டு, நாடு இயல்பு நிலையை அடைகின்றது என்று அரசாங்கம் வீராப்புப் பேசுவது வெட்கக்கேடானதும் கேலிக்குரியதுமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தற்போது வரிசைகள் இல்லை என்று பல நபர்கள் வீராப்புப் பேசினாலும் 2019ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்று எரிபொருள் உள்ளதா? என நாம் வினவுகின்றோம். ஊட்டச்சத்தான உணவு இல்லாவிட்டாலும் தற்பெருமை பேசுவதை நிறுத்தமுடியாது.

ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களிலேயே தனது நண்பர்களுக்கு பலகோடி வரிச்சலுகைகளை வழங்கிய தற்போதைய அரசு, வங்குரோத்தான நாடு இருந்ததை விட சிறப்பாக உள்ளது எனக் கூறுவது கேலிக்குரியது - என்றார். (ம-22)

## மூளைச்சாவடைவோர்

# சிறுநீரகத்தைத் தானமாக்கி உயிரைக் காப்பாற்றுங்கள்!



## சிறுநீரக மருத்துவ நிபுணர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஜூன் 16**

**விபத்து அல்லது வேறு நோய் காரணமாக மூளைச்சாவடைந்து இறந்தவர்களின் சிறுநீரகத்தைத் தானமாக வழங்கி பிறிதொரு உயிரை வாழவைக்க அவர்களின் உறவினர்கள் முன்வரவேண்டும். அதற்குப் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என சிறுநீரக மருத்துவ நிபுணர் எஸ்.மதிவாணன் கேட்டுள்ளார்.**

சிறுநீரக மாற்று சிகிச்சை விழிப்புணர்வு தொடர்பில் மருத்துவர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு இடையே இடம்பெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திடீரென ஏற்படும் விபத்து மற்றும் வேறு நோய்கள் காரணமாக மூளைச் சாவடைந்து இறப்போரின் இதயம் சிலமணிநேரங்கள் இயங்கிக் கொண்டிருக்கும். அதன்போது அவர்களது சிறுநீரகத்தை சத்திரசிகிச்சை மூலமாக சிறுநீரகம் தேவைப்படும் ஒருவருக்குப் பொருத்த முடியும்.

இதற்கு மூளைச்சாவடைந்து இறந்தவரின் உறவினர்கள் முன் வந்தால் இன்னொரு உயிரைக் காப்பாற்றும் சந்தர்ப்பம் ஏற்படும். பிறிதொரு உயிரை வாழவைக்கும் உயர்ந்த பாக்கியத்தைப் பெற்றவர்களாவர்.

இது தொடர்பில் விழிப்புணர்வை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ச)

# ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய சப்பறத் திருவிழா இன்று


யாழ்ப்பாணம், ஜூன் 16

ஆனைக்கோட்டை மூத்தநயினார் வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வெளிவீதி வலம் வருவார்.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து முருகப் பெருமான் உள்வீதி வலம் வந்து முற்பகல் 10.30 மணிக்கு தேரில் அரோகணிப்பார். தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பச்சை சார்த்துதல் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து முருகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம்வருவார் என ஆலய தர்மகர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (ம)



# அதிக கட்டணம் அறவிடும் ஓட்டோக்கள் மீது நடவடிக்கை!

## வவு.ஓட்டோச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 16

வவுனியாவில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் அதிகளவான கட்டணங்களை வசூலிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அதிகமாகக் கட்டணம் அறவிடப்பட்டால் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்போம் என மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் வவுனியா மாவட்டச் செயலர் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியாவில் முதலாவது கிலோமீற்றருக்கு 150 ரூபாவும் அடுத்து வரும் கிலோமீற்றர்களுக்கு 100 ரூபாவும் அறவிடுவதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் அதிகளவான கட்டணங்களை வசூலிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதிகமாகக் கட்டணம் அறவிடும் முச்சக்கரவண்டிகள் தொடர்பாக எமக்குத் தெரியப்படுத்தினால் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்றும் குறிப்பிட்டார். (ச-110)

# சங்கானையில் மதுபானசாலை; மக்களிடம் கருத்துக்கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சங்கானையில் மதுபானசாலையொன்று அமைப்பதற்கு தமது கருத்துக்களைத் தெரியப்படுத்துமாறு சங்கானை பிரதேச செயலகம் பொதுமக்களிடம் கோரியுள்ளது.

சங்கானை தபாற்கந்தோருக்கு அண்மையில் மதுபானசாலை அமைப்பதற்கு உரிமையாளர் ஒருவரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தப்பகுதியில் மதுபானசாலை அமைக்க, மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அனுமதிக்க முடியும் என தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னதாக சங்கானை பிரதேசசெயலாளர் அல்லது குறித்த பகுதியின் கிராமஅலுவலருக்கு பொதுமக்கள் தமது கருத்துகளை முன்வைக்கலாம் என பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (ச-125)

# மாணவர் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற அமர்வு. இன்று மு.ப. 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய செயலாளர் நாயகமான இ.ஶ்ரீதரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஜமுனா ராஜசீலன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய (சமூக விஞ்ஞானம்) உதவிக் கல்விப்பணிப்பாளர் லதிஸ்கிரேஸ் விக்ரர் ஜெயகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

# பொலிஸார் தொடர்ந்த வழக்கு சட்டத்துக்குப் புறம்பானது!

## சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் வருகைக்கு எதிராக, ஜனநாயக ரீதியில் போராடி எம்மீது சட்டத்துக்குப் புறம்பான வகையில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனநாயக வழியில் போராட்டம் மேற்கொண்ட எங்கள் மீது பொலிஸாரால் சட்டத்துக்குப் புறம்பான வகையில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முன்னிலையாகுவதற்காக இன்று (நேற்றுமுன்தினம்) நீதிமன்றத்தில் முற்பட்டிருந்தோம். ஆனால், பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருக்கின்றமையால் நீதிமன்றம் பிறிதொரு திகதியில் வழக்கை அழைக்கத் தீர்மானித்திருக்கின்றது.

இந்தக் கைதுகள் அனைத்தும் சிங்கள - பௌத்த பேரினவாதத்துடைய, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை எடுத்துக் காட்டுகின்றன. - என்றார். (ம-27-66)

# குழந்தை ஆரோக்கியம் தாய்மார் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 16

தெல்லிப்பழையில் குழந்தை வளர்ப்புக்கலைப் பரீட்சையில் சிறப்பான புள்ளிகள் பெற்ற தாய்மாரைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ப.நந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. குழந்தை வளர்ப்புக்கலை தொடர்பில் சிறுவர் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட பரீட்சையில் சிறப்பான அடைவு மட்டத்தை தாய்மார் வெளிப்படுத்தினர். (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போதையை...

யாழ். மாவட்டச் செயலகத்தில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது இனத்தை அழிப்பதற்காகத்தான் இங்கு போதைப்பொருள் பரவவிடப்பட்டது என்று சொல்லி நாங்கள் தப்ப முடியாது. இயக்கங்கள் அனைத்தும் போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டிருந்தன. சில இயக்கங்கள் கப்பல் கப்பலாக போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டன. சில இயக்க உறுப்பினர்கள் தனியாகவும் போதைப் பொருள் வியாபாரத்தை மேற்கொண்டனர். இதை என்னுடைய அனுபவத்தில், மன்னிக்கவும், அனுபவத்தில் அல்ல நேரடியாகப் பார்த்ததை வைத்துச் சொல்கின்றேன். போதைப்பொருள்களை நானும் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். நான் இருந்த இயக்கம் போதைப் பொருள் கடத்தவில்லை. போதைப் பொருள் கடத்தியவர்களிடமிருந்து நான் பணம் வாங்கியிருக்கின்றேன். மீன் மணக்கும் மீன் விற்ற காசு மணக்காது. சரி பிழை என்பதற்கு அப்பால் இயக்கங்கள் எல்லாம் போதைப்பொருள் வியாபாரம் செய்தன என்பது உண்மை. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் போதைப்பொருள் விற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு பிரபாகரன் தண்டனையும் கொடுத்திருக்கின்றார்.

நாங்கள் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னர் இருந்த நிலைமைவேறு. இப்போது இருக்கின்ற நிலைமை வேறு. அன்றைய காலத்தில் பாடசாலைகள், கோயில், விளையாட்டு என்று பல இருந்தன. ஆயுதம் ஏந்திய காலத்தில் அதுவேறு நடைமுறையாக மாறியது. ஆயுதப் போராட்டம் நிறைவடைந்த பின்னர் அது வேறுவிதமாகக் காணப்படுகின்றது. அனைவரும் இன்று தொலைபேசியை நோண்டுகின்றனர். சிலர் பொழுதுபோக்குக்காக நோண்டுகின்றார்கள். சிலர் வேலைகளின் அடிப்படையில் நோண்டுகின்றார்கள். இது தவிர்க்க முடியாதது தான். ஆனால், இவற்றிலிருந்து எப்படி விடுபடலாம் என்பதையும் நாம் ஆராய வேண்டும். போரை முடிவுக்கு கொண்டு வந்த முப்படையால் இதனைக்கட்டுப்படுத்த முடியாதா என்று இங்கே கேள்வி எழுப்பினார்கள். போதைப்பொருள் வடக்கில் மாத்திரமல்ல தென்னிலங்கையிலும் இருக்கின்றது - என்றார். (அ-ஓ.125)

## புலமைப்பரிசில்...

புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி எக்காரணத்துக்காகவும் நீடிக்கப்படாது என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (அ-ம)

## தனியாரை...

வரத்தை முன்னெடுக்குமாறு வீதிப்போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார் கடற்றொழில் அமைச்சரும், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா. இந்த சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறு அவர் பிரதேச செயலரையும் அறிவுறுத்தியுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ஊர்காவற்றுறை பிரதேசமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, அவற்றுக்கான தீர்வு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

அதேபோன்று, பிரதேசத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் உணவகங்களை திடீர் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுச்சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கால்நடைகள் திருடப்பட்டு, இறைச்சிக்கு வெட்டப்படுவதை தடுக்கும் நோக்கிலே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, தீவகங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டணங்களை மீளாய்வு செய்தல், குடிதண்ணீர் விநியோகத்தை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களும் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன், ஏனைய விடயங்களை மிக விரைவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-125)

## நயினாதீவு...

வுள்ள நிலையில் குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கு 40 படகுகள் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழாவுக்கு பயணிகள் பயணிப்பதற்கு ஏற்புடைய படகுகளுக்கான அனுமதிப் பத்திரம் கப்பற்றுறை வணிக அமைச்சின் செயலகத்தில் இருந்து பெறபட வேண்டியது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கச்சதீவு பெருநாளையொட்டி 21 படகுகள் பயணிகளின் பயணத்துக்கு ஏற்றன என்று அனுமதிக்கப்பட்டிருந்தன. நயினாதீவு பெருந்திருவிழாவுக்கு இம்முறை மேலதிகமாக 21 படகுகள் விண்ணப்பித்திருந்த நிலையில் 19 படகுகளுக்கு மட்டுமே அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இரு படகுகளுக்கு திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் உற்சவகாலத்தில் 40 படகுகள் சேவையில் ஈடுபடும் - என்றார். (அ-ம-ஓ.5,125)

## முன்னணியின்...

களைத் தொடர்ந்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூவர் நேற்றும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். எனினும், அவர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்து பிணையில் விடுவித்தது.

மருதங்கேணிப் பகுதியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நோக்கி பொலிஸார் துப்பாக்கியை நீட்டி உயிரச்சுறுத்தல் விடுத்திருந்தனர். அத்துடன், முன்னணியின் இதர பலரும் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டனர் என்று முன்னணியினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால், முன்னணியினரே தமது கடமைகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர். இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட சிலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்த விவகாரத்தில் விசாரணைக்கு வருமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகர், யாழ். மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோர் நேற்று அழைக்கப்பட்டிருந்தனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் கோரினர். எனினும், அதை ஏற்க மறுத்த நீதிமன்றம் அவர்களைப் பிணையில் விடுவித்தது. (அ-ம)

## ஊடகங்களை...

சட்டத்தினை நீக்கிய நான் ஒருபோதும் கருத்துரிமையை பறிக்கும் வகையில் செயற்படப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தண்டனைச் சட்டக்கோவையில் குற்றவியல் அவதூறுச் சட்டம் காணப்பட்டது. நானே அதனை நீக்கினேன். ஆசிய வலயத்தின் எந்தவொரு நாடும் அதனை நீக்கியிருக்கும் என நான் நினைக்கவில்லை. இவ்வாறிருக்க, பாதுகாக்கப்பட்ட கருத்துரிமையை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகள் ஏன் முன்னெடுக்கப்படவேண்டும்? எவருக்கும் அதனை நீக்குவதற்கான அவசியமில்லை. இங்குள்ள அனைவரையும் விட ஊடகங்களுடன் நெருக்கமான தொடர்பு எனக்கு உள்ளது. அதனால் கருத்துரிமையை பறிக்கும் நோக்கம் எவருக்கும் இல்லை. இங்குள்ள பிரச்சினை மாறுபட்டதாகும். ஊடகங்களால் அநீதி ஏற்படும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தினை சகல நாடுகளும் கொண்டுள்ளன. தேவையும் அதுவே. இங்கு அரச ஊழியர்கள் இருக்கின்றனர். இவர்களின் எத்தனை பேருக்கு இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக அவதூறு ஏற்படுத்தப்பட்டிருக்கும். சில நேரங்களில் இலத்திரனியல் ஊடகங்கள் ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுகின்றன. இதனால் அவர்களுக்குக் கிடைக்கப்போகும் நிவாரணம் என்ன?, பொது மக்களுக்கு மாத்திரமன்றி எனக்கும் அந்தப் பிரச்சினை உள்ளது - என்றார். (அ-ம)

## சஜித்...

யிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வதேசத்திடம் அரசு, யாசகம் பெற்று வருகின்றது. ஆனால், நாட்டை மீட்கக்கூடிய வகையிலான உதவி இன்னும் கிடைக்கவில்லை. இந்த அரசால் நாட்டை மீட்க முடியாது. எனவே, தேர்தலுக்கு செல்லுமாறு அழைப்பு விடுக்கின்றோம். நாட்டை மீட்பதற்கான பொது வேலைத்திட்டம் தொடர்பில் கட்சிகள் பேச்சு நடத்திவருகின்றன. அந்தவகையில் சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய கூட்டணி அமையும். அடுத்து நடைபெறும் தேர்தல்களின் அந்த கூட்டணியின் கீழ்தான் எதிரணிகள் போட்டியிடும்' - என்றார். (அ-ம-44)

## ஆட்சியைத்...

அதற்கு வெளியிலும் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளது பொதுஜன பெரமுன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, செயலாளர் சாகர காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, அமைச்சர் டிரான் அலஸ், இ.தொ.கா.வின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான், தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா உள்ளிட்டோர் சந்திப்பில் பங்கேற்றனர். அமைச்சர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று பஸில் ராஜபக்ச கூறினார் என்று சாகர காரியவசம் தெரிவித்தார்.

அத்துடன், பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்புக்கு அழைப்பதாக இருந்தால் அது தொடர்பில் பெரமுனவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என பெரமுனவால் விடுக்கப்பட்ட கோரிக்கை ஜனாதிபதியால் ஏற்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசுக்குள் பிரச்சினைகளை ஏற்பட்டால் அப்பிரச்சினைகள் பேச்சுமூலம் தீர்ப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. அதேவேளை, அரச பங்காளிக்கட்சி தலைவர்களுடன் மாதம் ஒரு முறை சந்திப்பை நடத்துவதற்கும் ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளார். (அ-ம-44)

## வடக்கில்...

கொள்கின்றனர். அவர்களைப் பார்வையிடச் செல்லும் உறவினர்கள் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியிருக்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டு வடக்கில் போதைப்பொருள் புனர்வாழ்வுமையத்தை அமைப்பது என்றும் வவுனியா பூந்தோட்டம் அதற்குப் பொருத்தமான இடம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருளுக்கு அடிமையான தங்களது பிள்ளைகளை புனர்வாழ்வுக்கு அனுப்ப பெற்றோர் முன்வருகின்றனர். ஆனால், பிள்ளைகளை வடக்குக்கு வெளியில் கொண்டு சென்று புனர்வாழ்வு வழங்குவதற்கு அவர்கள் பின்னடிக்கின்றனர். தென்னிலங்கையில் தமிழ்மொழி உளவள ஆலோசகர்கள் பற்றாக்குறை இருக்கின்றது. பெற்றோரும் நீண்ட தூரம் பயணித்து தமது பிள்ளைகளைப் பார்வையிடவேண்டிவரும் என்பதால் புனர்வாழ்வுக்கு பிள்ளைகளை அனுப்பத் தயங்குகின்றனர். வடக்கு மாகாணத்துக்கு தனியான புனர்வாழ்வு மையம் தேவை என்று அதிகாரிகள் கோரினர்.

வவுனியா பூந்தோட்டத்தில் கூட்டுறவுச் சங்கத்தின் காணி உள்ளது. அங்கு 150 பேருக்கு ஒரே தடவையில் புனர்வாழ்வளிக்கமுடியும். தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் கீழேயே இவ்வாறான புனர்வாழ்வு மையம் அமைக்கப்பட முடியும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையே இறுதி முடிவாக ஏற்றுக்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் கீழ் புனர் வாழ்வுமையத்தை வவுனியாவில் உருவாக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ-ஓ.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 வயதுச்...

கணவனைப் பிரிந்து வாழும் பெண் ஒருவரின் 10 வயதுச் சிறுமிக்கே அவரது அயல் வீட்டைச் சேர்ந்த 30 வயதான குடும்பத் தலைவரால் பாலியல் தொந்தரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுமி வீட்டில் உறக்கத்திலிருந்த நேரத்தில் குடும்பத்தலைவர் சிறுமியின் ஆடைகளைக் களைய முற்பட்டபோது தாயார் அதனைக் கண்டுள்ளார். இதனையடுத்து குடும்பத் தலைவர் தப்பிச் சென்றுள்ளார். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ-ஓ.5)

## 14 வயதான...

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயது மாணவியொருவர் பாடசாலைக்குச் செல்வதாக பெற்றோரிடம் கூறிவிட்டு தனது காதலுடன் சென்றுள்ளார். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கலாசாரச் சீர்கேடுகள் அதிகம் இடம்பெறுவதாக பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட இடத்துக்குச் சென்றுள்ளனர். அங்குமாணவியை காதலன் வன்புணர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளைமாணவியைக் காணவில்லை என்று தாயார் பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக தேடுதல் நடத்திய பொலிஸார் மாணவியை மீட்டுள்ளனர். அவர் மருத்துவ பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்போதே அவர், தனது காதலனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். மருத்துவ பரிசோதனையிலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயதான பிறிதொரு பாடசாலை மாணவியும் 17 வயதுக் காதலுடன் சென்றுள்ள நிலையில், மாணவியின் பெற்றோரின் முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் அவரை மீட்டுள்ளனர். மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் முற்படுத்தப்பட்டுள்ளார். அவர் காதலனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ-ஓ.5.125)


## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றிற்கு **கணக்காளர் (பெண்)** மற்றும் **முகாமையாளர் (ஆண்)** தேவை.

**021 221 0054**

## நாடளாவிய சேவை போட்டிப்பரீட்சை நேரடி வகுப்புக்கள்

SLAS, SLEAS, SLACS, SLPS, SLSS

சனி, ஞாயிறு 9.30 am - 2.30 pm

ஆரம்பம்: சனி (17/6) 9.30am

வளவாளர்கள்
T.தவசேகர்
P.கமலதாசன்
P.உமாசங்கர்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

0766883394
0775265344

## நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்நகர்

July 29ம் திகதி நடைபெறவுள்ள...
**All Island Service Exam**
SLAS, SLEAS, SLPS, SLAcS (Open)

August மாதம் நடைபெறவுள்ள...
SLAS, SLEAS (Ltd)

போட்டிப்பரீட்சைக்கான நேரடி வகுப்புகள்
ஆரம்பம்: 17-06-2023 சனி காலை 9.00 மணி

இலங்கையின் முன்னணி வளவாளர்களான
P. உமாசங்கர் P.கமல்தாசன் T.தவசேகர்
மற்றும் துறைசார் வளவாளர்கள்
தொடர்பு: 0774696695 / 0761661986

## DMI Jaffna

நாளை: காலை 9:00

வர்த்தகம் | கலை

A/L-2025

Dmi Daniel | 077 848 0604

பொருளியல் KR. உதயன்
உம் DMI யில்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 436 5814

## சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, பவர்ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், நமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (17.06.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளலாம்.

வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்

ஆர்க்என்ர பிறைசஸ் பிறைவேட் லிமிட்ட் A9, வீதி, பரந்தன் சந்தி.

தொடர்புகளுக்கு:- 071 535 7800

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீருற்று.
* ஒரு பரப்பின் விலை 300,000/= (மூன்று லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606

## வீடு வாடகைக்கு

கந்தர்மடம் அம்மன்வீதியில் நான்கு அறைகள், வரவேற்பறை, சாப்பாட்டறை, குளியலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. மருத்துவர், பொறியியலாளர், விரிவுரையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 076 802 7141 (காலை: 10.00 இரவு 9.00 மணிவரை தொடர்புகொள்ளவும்)

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lanka Tile Show Room இற்கு கீழ்க்குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை.

✓ மனேஜர் - Tile Show Room ஆண்
சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்கள்
✓ கணக்கு பதிவாளர் - ஆண்
✓ பணியாளர்கள் - ஆண் 2 பேர்
✓ விற்பனை முகவர்கள் - Tile, Cement ஆண்

இம்மாதம் 14,15,16 ஆம் திகதிகளில் வதிவிடச் சான்றிதழ், குடும்ப அட்டைப் பிரதி, கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை பிரதி மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

(CR/401227)AH-1

குருஹாட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A/L தொழில்நுட்ப பிரிவு
புதிய கல்வியாண்டு
A/L 2025

● திகதி - 18.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
● நேரம் - காலை - 8.30


(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகத்தெரிவு)
(வேறு எங்கும் கிளைகள் கிடையாது)

தொடர்புகளுக்கு: 077 017 5346


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் கௌரவ பொதுச் செயலாளரும், தற்போதைய ஆலோசகரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான

## உயர்திரு சரவணமுத்து புவனேஸ்வரன் (சரா)

அவர்களின்



## மணிவிழாவும் வெற்றித்தேர்வு நூல் வெளியீடும்

தலைமை
"கருமத்திருதி"
வைத்திய கலாநிதி லயன் வைத்திலிங்கம் தியாகராஜா அவர்கள்
(நூற்றாண்டு ஆளுநர் (2016/2017) சர்வதேச லயன்ஸ் கழகம்)

காலம் : 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகம்

தங்களை அன்புரிமையுடன் அழைக்கின்றோம்

சரா மணிவிழாச்சபை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.